உ

கடவுள்துணை.

நடேசர்சிந்து.



சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

புத்தகவிளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது சென்னை பெரம்பூர் போஸ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம்பங்காருசெட்டிவீதி 3-வது, நெ, வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில் தமிழில் தேவையான புத்தகங்களும், அநேகவிதமருந்துகளும், விச்சித்ரமான றப்பர் ஸ்டாம்புகளும் றப்பர்எழுத்துகளும் உண்டு ½-அணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம்தெரிவித்தால் 2-அணா பொரும்படியான (2) கேட்லாக் அனுப்பப்படும்.

(ஸ்ரீபுருஷ லக்ஷணக்குறிசாஸ்திரம்) தேகத்திலுள்ள குறிகட்கெல்லாம் பலன்தெரிந்துக் கொள்ளும்படி அச்சிட்டது.

இதன்விலை அணா 0 12 0

பட்டணத்துப்பிள்ளையார் திருப்பாடல் மூலமும்-உரையும்	0 10 0
பட்டணத்தார்பாடல் உரையும் பட்டணத்தார்புலம்பல் உரையும் பத்திரகிரியார்புலம்பல் உரையும் மூன்றும் ஒரேகட்டடம் கலிகோபயிண்டு	1 2 0

ஜாதகங்கணிக்கும்விபரமும், ஜாதகனுக்கு பலாபலன்களும், பெண்கள்ஜாதகமும், எளிதிலறியும்படி அச்சிட்டிருக்கிற

அனுபோகஜாதகரகசியம் கிளோஸ்கடிதம் 0 12 0

அஷ்டதிக்காரூடம் கிளோஸ்கடிதம்விலை அணா 0 12 0

வி. பி. போஸ்ட் சார்ஜி பிரத்தியேகம்.

இப்படிக்கு

பூ. சு. குப்புசாமி முதலியார்.

சுந்தரவிலாசம்பிரஸ் பிரம்பூர்போஸ்ட் மதராஸ்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நடேசர் சிந்து

சீரார்நடேசர் சிந்தென்றபாடல்
சீராகயானுணாக்க விநாயகா
சித்தம்வைத்தாளுமையா.

ஆனந்தநாதா ஆடியபாதா
மோனந்தமாகவந்தே நடேசா
முத்திதந்தாளுமையா (௧)

அய்யபரமே ஆதிசிவமே
மெய்யாயுனைப்பணியும் நடேசா
மைந்தனைக்காருமையா (௨)

கங்கைதரித்தவாகாலனையுதைத்தவா
மங்கைசிவகாமியுடன் நடேசா
மலர்ப்பதந்தந்தாளையா (௩)

சிவகாமிபாகாசின்மயதேகா
பவமதைநீக்கியெந்தன் நடேசா.
பிழைபொறுத்தாளுமையா (௪)

பஞ்சகிர்த்தியாதாரபரமதயாபர
கெஞ்சுறபஞ்சைமீது நடேசா
கிருபைகூர்ந்தாளுமையா (௫)

சந்திரசடாதரசாம்பசிவஹர
சுந்தரகிருபாகர நடேசா
சுகப்பொருள் தந்தாளையா (௬)

சரியைகிரியையோகம்சார்ந்தஞானமாக
கரியைப்போர்த்ததேக நடேசா
கடையனைக்காருமையா (௭)

பதஞ்சலிவியாக்கிரர்க்கும்பாததெரிசனம்
நிதந்தந்துகார்த்ததுபோல் நடேசா
நேசமாய்த்தந்தாளையா (௮)

புரமூன்றெரித்தவனே புண்ணியமானவனே
சிரமலைதரித்தவனே நடேசா
சிறியேனையாளுமையா (௯)

மோனஞானமான மூலகாரணனை
ஆனந்தத்தாண்டவனே நடேசா
அடியேனைக்காருமையா (௰)

தில்லைச்சிதம்பரனே தொண்டர்துதி அரனே
அல்லல்படுவோனே நடேசா
ஆதரித்தாளுமையா (௰௧)

அன்னைதந்தையில்லை யன்பானபேருமில்லை
சொன்னேனுனையே யல்லால் நடேசா
சுகந்தர ஆருமில்லை (௰௨)

ஊரிருந்தென்ன உற்றாரிருந்தென்ன
ஆரிருந்துமென்ன நடேசா
அலையாதெனை யாளையா (௰௩)

நம்பினேனுன்னை நழுகவிடாதென்னை
அம்பிகைபாகாமுன்னை நடேசா
அன்பாயெனையாளையா (௰௪)

என்போலபாவி யுலகிலுலாவி
உன்னையே நிதங்கூறு நடேசா
உருகாதெனையாளையா (௰௫)

பத்திசெய்யாச்சிறியேனைப் பாரில்லைவோனே
உத்தமமினமையனை நடேசா
யுறுதியாயாளுமையா (௰௬)

எப்போதுமித்தேகம் இருந்தென்னயோகம்
ஒப்பிலாவுன்பதத்தை நடேசா
உகமையாய்த் தந்தாளையா (௰௭)

ஆரணனாரணற்கும் அனந்ததேவர்க்கும்
காரணமானவனே நடேசா
கருத்தாயெனையாளையா (௰௮)

நித்தியானந்தமூர்த்தி நிமலா அருள்புத்தி
பத்தியாயுனைப்பணியும் நடேசா
பாலகனைக்காருமையா (௰௯)

இத்தனைநாளும் எளியேன்படுந்துயரம்
சுத்தனேநீதீர்த்து நடேசா
சுகம்பெறப்பாருமையா (௨௰)

பலவினைதீர்க்கும் பத்தரைக்காக்கும்
தவபலமானோர்துதி நடேசா
பத்தனைக்காருமையா (௨௧)

பஞ்சாட்சரப்பொருளே பரமசுகப்பொருளே
அஞ்சாமல் தந்தருளே நடேசா
அன்பனைக்காத்தருளே (௨௨)

திருத்தில்லைராயாதேவர்சகாயா
வருத்தந்தனைத்தீர்த்து நடேசா
வடியனைக்காருமையா (௨௩)

தேவாதிதேவா திருமால்விடைமேல்வா
மூவர்க்குமேலானவா நடேசா
முன்னடியெனைக்காருமையா (௨௪)

முத்திக்குகந்தவனேமுகுந்தர்க்காழிதந்தவனே
நித்தந்துதிக்குமெனை நடேசா
நிலைமையுடனாளுமையா (௨௫)

அஷ்டதிசைப்பதி ஆனந்தமானநிதி
இஷ்டமாய்நல்லகதி நடேசா
ஈந்தெனையாளுமையா (௨௬)

ஐம்புலத்தாலே அடியைக்காணுதாலே
இன்பம்வைத்துன்னடியை நடேசா
ஏழைக்குத்தந்தாளேயா (௨௭)

வையம்புகழ்மெய்யாமான் மழுவேந்துங்கையா
ஒய்யாரமாகவந்தே நடேசா
உகந்தெனையாளுமையா (௨௮)

அஞ்செழுத்தோதி யருந்தவந்தோர்துதி
குஞ்சிதப்பாதந்தந்துன் நடேசா
குழந்தையைக்காருமையா (௨௯)

ஆலவிடங்கண்டு அமரர்க்காகஉண்டு
நீலகண்டமானவரே நடேசா
நீயெனையாளுமையா (௩௰)

மாதர்வலையிற்பட்டுமயங்கினேனுன்கெட்டு
பாதகனாகாமலே நடேசா
பட்சம்வைத்தாளுமையா (௩௧)

தும்புருநாரதரை தூய்சூதமுனிவோரை
சம்பிரமமாகக்காத்ததுபோல் நடேசா
சதுருடனாளுமையா (௩௨)

மால்மதத்தளங்கொட்ட மலரோன்தாளந்தட்ட
கால்தூக்கி ஆடிநின்ற நடேசா
கழலிணைதந்தாளேயா (௩௩)

பொன்னுலகவானோர் புகழ்மயிலாப்பூர்
தன்னிலேவளரற்புதனே கபாலீசா
ததியிதுவந்தாளேயா (௩௪)

காஞ்சிபுரியானே காமனையெரித்தோனே
அஞ்சியடியேனுக்குன் ஏகாம்பரா
அருள்தந்துகாருமையா (௧௫)

திருவானைக்காவில் திருமால்தொழுங்கோயிலில்
உருவாகியேவிளங்கும் சம்புலிங்கா
உலகிலெனையாளையா (௧௬)

அண்ணாமலையான அன்பர்நிலையானே
உண்ணாமுலைப்பாகனே அருணாசலீசா
உகந்தெனையாளுமையா (௧௭)

திங்களணிநாதா தூயர்புகழ்பாதா
தங்கமயத்தென்காளத்தி நாயகா
தமியேனைக்காருமையா (௧௮)

சிலமுனிவர்தொழும் செல்வசிவகாமிமகிழ்
கோலப்பதங்களையே நடேசா
குறைவிலாதந்தாளையா (௧௯)

மந்திரமூலாமறையவர்நூலா
சுந்தரம்தொழும்சீலா நடேசா
சுந்தரர்க்கநுகூலா (௨௰)

ஆடும்நடேசர் ஆனந்தசிந்தை
பாடிப்படிப்போர்க்கு நடேசா
பரகதிதந்தாளையா (௨௧)

நடேசர்சிந்து
முற்றிற்று.